# லண்டன் மலையக இலக்கிய மாநாடு 2022



**11 June 2022 - Trinity Centre, London E12**

# சமர்ப்பணம்

கடல் கடந்த பயணத்தில்
படகுகள் கவிழ்ந்து
கடலில் சங்கமித்தோர்,
எலும்புக்கூடுகள் சமைத்த
மன்னார்-மாத்தளை வழியில்
வனவிலங்குகளுக்கு இரையானோர்,
தேயிலை மலைகளுக்கு உரமான
கோடிக்கணக்கான
மலையக மக்களின் நினைவிற்கு...



ஊனையும் உடலையும்
ஊட்டி இம்மண்ணை
உயிர்த்த வர்க்கு இங்கே
உளங்கசிந் தன்பும்

பூணுவாரில்லை –அவர்
புதைமேட்டிலோர் –கானகப்
பூவைப் பறித்துப்
போடுவாரில்லையே

– சி. வி. வேலுப்பிள்ளை

# விம்பத்தின் 18 ஆண்டுகள்

## கே..கிருஷ்ணராஜா

இலங்கை, இந்தியா, புகலிடம் என்று பரந்த தளத்தில் கலை, இலக்கியம், சினிமா, குறும்படங்கள், ஓவியம், ஒளிப்படம் போன்ற துறைகளில் விம்பம் தனது சிறகை விரித்திருக்கிறது. கடந்த பதினெட்டு ஆண்டுகளின் வளர்ச்சியைப் பின்னோக்கிப் பார்க்கையில் பெருமைப்படத்தக்க நிகழ்ச்சிகளைச் செய்து பார்த்திருக்கிறோம் என்றே கூறத்தோன்றுகிறது. குறும்படவிழாக்கள் குறும்படத் தயாரிப் பாளர்களை ஊக்குவித்ததோடு கலைத்துவம் மிக்க சினிமா ரசனையையும் பரவலாக எடுத்துச் செல்ல உதவியிருக்கின்றன.

நாங்கள் நடத்திய நாவல் கருத்தரங்குகள் இலங்கையிலும் தமிழகத்திலும் எழுத்தாளர் கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றன. தெரிய வராத பல நூல்கள் வாசகப்பரப்பி-ற்கு கொண்டுசெல்லப்பட்டிருக்கின்றன. புதிய கவிஞர்களின் படைப்புகள் ஆய்விற் குள்ளாகியுள்ளன. நம் மத்தியில் உள்ள ரசனைமிகு விமர்சகர்களுக்கு விம்பம் தாராளமாகத் தளம் அமைத்துக்கொடுத்திருக்கிறது.

2019 ஆம் ஆண்டில், ஈழத் தமிழர் மத்தியில் நவீன ஓவியக்கலையின் முன்னோடியான அ.மாற்கு அவர்களின் நினைவாக இலங்கையில் பருத்தித்துறை, ஆனைக்கோட்டை, தெல்லிப்பளை, கிளிநொச்சி, மட்டக்களப்பு, கொட்டகலை ஆகிய இடங்களில் விம்பம் நடத்திய சிறுவர் ஓவியப்போட்டியும், கண்காட்சிகளும், ஊக்குவிப்புத் தொகையாக ரூபாய் 500,000 பரிசளித்தமையும் மாணவர் மத்தியில் புது உற்சாகத்தை ஏற்படுத்தியிருந் தன. பரந்த அளவிலான இந்த ஓவியப்போட்டிகளுக்கு இலங்கையில் முழு ஒத்துழைப்பு நல்கிய அதிபர்கள், ஆசிரியர்கள், மாவட்ட கல்வி அதிகாரிகள், ஏடு அமைப்பு, ஆகியவற்றுடன் போட்டியில் பங்கேற்ற மாணவர்கள் அனைவருக்கும் இங்கு எமது நன்றியைத் தெரிவிக்கவிரும்புகிறோம்.

பெருந்தொற்று நோய்க் காலத்தின் பின்னர், நாங்கள் இந்த ஆண்டு திரும்பவும் தொடர் ந்து நடத்திய நூல் வெளியீட்டு நிகழ்வுகள் நல்லாரம்பங்களாக அமைந்தன. மெய்யியல் அறிஞர் செ.வே.காசிநாதன் அவர்களின் 'விற்கன்ஸ்ரைன்: மொழி அர்த்தம் மனம்' என்ற நூலும் அமரர் சாரல்நாடனின் 'வானம் சிவந்த நாட்கள்' என்ற நாவலும் பரவலான அறிமுகம் பெற இந்நிகழ்வு உதவியுள்ளது.

'கவிதை புனைந்த உலகு' என்ற தலைப்பில் நாம் நடத்திய ஐந்து கவிதைத் தொகுப்பு களின் மீதான விமர்சன அரங்கு வாசகர் மத்தியில் சிறந்த கவன ஈர்ப்பைப்பெற்றது.

இன்று நடைபெறும் 'மலையக இலக்கிய மாநாடு - 2022' மலையக இலக்கிய வளர்ச் சியின் முக்கிய மைல்கற்களை உணர்த்தி நிற்கும் நூல்களை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ளது. இன்றைய முழு நாள் மாநாட்டில் 26 மலையக நூல்களைக் கணக்கிலெடுத்து, அறிமுகப்படுத்தும் பாரிய நிகழ்ச்சியை முன்னெடுத்தபொழுது, மலை யக எழுத்தாளர்களிடமிருந்து எங்களுக்குக் கிடைத்த ஒத்துழைப்பு நெஞ்சை நிறைத்தது. ஐரோப்பாவிலிருந்து இலக்கிய நெஞ்சங்கள் தந்த பேராதரவும் நன்றிக்குரியது.

இன்றைய மாநாட்டிற்கு பிரதமவிருந்தினராக, இலங்கையில் இருந்து வருகை தந்திருக் கும் பேரன்புக்குரிய எச்.எச்.விக்ரமசிங்க அவர்களை வரவேற்பதில் பெருமகிழ்வடைகிறோம்.

எமது கனவுகள் தொடுவானம் வரை விரிந்தது.
வானமும் வசப்படும் என்ற நம்பிக்கையில் நமது அடிகள் நகர்கின்றன.

# இன்றைய மாநாட்டிற்கு பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பிக்க வருகை தந்திருக்கும்

## எச்.எச்.விக்ரமசிங்க அவர்கள் பற்றி சில வரிகளில்...



இம் மாநாட்டிற்காக இலங்கையிலிருந்து வருகைதந்திருக்கும் மாத்தளையைச் சேர்ந்த **எச்.எச்.விக்ரமசிங்க** அவர்கள் கல்விமான் இர.சிவலிங்கம், திருச்செந்தூரன், வீரகேசரி எஸ்.எம்.கார்மேகம், பேராசிரியர். சோ.சந்திரசேகரம் அவர்களின் வழிகாட்டலில் உருவானவர்.

மலையகத்தின் முதல் சிறுகதைத் தொகுப்பான 'கதைக்கனிகள்' (1971) வெளியீட் டில் இவரது பங்கு முக்கியமானது. நவாலியூர் க.சொக்கநாதனின் 'குறவஞ்சி' (1993), மாத்தளை வடிவேலனின் 'மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்'(1997), 'மலையக பரிசுக்கதைகள்' (1994), 'அமரர் இர.சிவலிங்கம்: மலையக சிந்தனைகள்' (2001), 'மலையகத்தின் எழுச்சித் தலைவர் பெ.சந்திரசேகரன்' ( 2014,2017), 'எஸ்.எம். கார்மேகம்-வாழ்வும் பணியும்' (2018), பி.ஆர்.பெரியசாமியின் 'தோட்டத்தொழிலாளர் வீரப்போராட்டம்' (2021), சாரல்நாடனின் 'வானம் சிவந்த நாட்கள்' (2022), சி.வி.வேலுப் பிள்ளையின்' மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்' (2022) ஆகிய நூல் களைப் பதிப்பித்து மலையக பதிப்புத் துறையில் அழுத்தமான தடத்தைப்பதித்-துள்ளார். மலையக அரசியல், சமூக, இலக்கிய ஆவணங்களைச் சேகரிப்பதில் சளைக்காது உழைத்து வருபவர்.

எண்ணிய எண்ணியாங்கு எய்யும் பண்பாளர். நல்லவே நினைக்கும் உயர் பண்பு அவருடையது.



# மலையக இலக்கிய மாநாடு தொடரவேண்டும்!

எச்.எச்.விக்ரமசிங்க

நாங்கள் லண்டனுக்கு வந்திருந்தபோது, மலையகத்தின் மறைந்த எழுச்சித்தலைவர் பெ.சந்திரசேகரம் அவர்கள் புலம்பெயர்ந்து வாழும் மலையகத் தமிழர்கள் அனைத்துலக ரீதியில் ஓர் அமைப்பாக உருப்பெற வேண்டும் என்று மு.நித்தியானந்தன் அவர்களுடன் லண்டனில் கலந்துரையாடி இருந்தார். அனைத்துலக ரீதியில் அத்தகைய அமைப்பு உருவாக இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும் என்று கூறத்தெரியவில்லை. ஆனால், அத்தகைய அமைப்பிற்கு லண்டனில் நடைபெறும் 'மலையக இலக்கிய மாநாடு' ஒரு அடித்தளமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு 1996 ஆம் ஆண்டில் கண்டியில் சிறப்பாக நடைபெற்று, அம்மாநாட்டின் ஆய்வுக்கட்டுரைகள் ஒரு தொகுதியாகவும் வெளியிடப்பட்டது. அம்மாநாடு நடந்து இன்று 25 ஆண்டுகள் கடந்து போய்விட்டன.ஆனால், அதன் தொடர்ச்சி பேணப்படவில்லை. இன்றோ இலங்கைச் சூழல் மிக மோசமான கட்டத்தை அடைந்து விட்டநிலையிலும், லண்டனில் இம்மாநாடு திட்டமிட்டபடி சிறப்பாக நடைபெறுவது மலையக இலக்கியவாணர்களுக்கும், இலக்கியச் சுவைஞர்களுக்கும் பெரும் உற்சாகத்தைத் தந்துள்ளது.

மிகச் சிறந்தமுறையில் திட்டமிடப்பட்டு, முறையாக நூல்கள் தெரிவு செய்யப்பட்டு, ஆற்றல்மிக்க விமர்சகர்களை உள்வாங்கி, ஐரோப்பா தழுவிய நிலையில் இம்மாநாடு நடைபெறுவது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இலங்கையிலிருந்து பல நூல்களை எழுத்தாளர்களிடமிருந்து சேகரித்து லண்டனுக்கு அனுப்பிவைக்கும் பொழுதில் சம்பந்தப்பட்ட எழுத்தாளர்கள் காட்டிய அக்கறையினை நேரில் பார்த்து அனுபவித்தேன். பாரபட்சமின்றி மூத்த எழுத்தாளர்கள், இளம் எழுத்தாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் என்று அனைவரையும் அணைத்து மேற்கொள்ளப்பட்டிருக்கும் இம்மாநாட்டு ஒழுங்கு முறை பெரிதும் பாராட்டிற்குரியதாகும்.

இலக்கிய நிகழ்விற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட அதே வேளை, ஓவியர் கே.கிருஷ்ணராஜா மலையகத்தில் 2019 ஆம் ஆண்டு நிகழ்த்திய ஓவியப்போட்டியில் தெரிவு செய்யப்பட்ட ஓவியங்களைப்பேணி இம்மாநாட்டில் மலையக ஓவியக் கண்காட்சியை நிகழ்த்தவிருப்பது மிகப்பெருஞ் சிறப்பாகும்.

நடேசய்யர் நடத்திய 'வர்த்தகமித்திரன்' பத்திரிகை உட்பட நூற்றுக்கணக்கான மலையக நூல்களும், சஞ்சிகைகளும் காட்சிக்கு வைக்கப்படவிருப்பதாக அறிந்து மகிழ்ச்சியுற்றேன்.

உலக அரங்கில் மலையக இலக்கியம் பேசப்படுவதற்கு இம்மாநாடு முக்கிய புள்ளியாக அமையும் என்று நம்புகிறேன்.

இம்மாநாட்டினை நடத்துவதற்கு முன்னின்றுழைக்கும் லண்டன் விம்பம் அமைப்பினருக்கு என் பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரியன.


விம்பம் அமைப்பினர் மலையக இலக்கிய மாநாட்டினை இனிவரும் ஆண்டுகளிலும் முன்னெடுத்துச்செல்ல வேண்டும் என்று வேண்டுகிறேன்.

*39/21 அல்விஸ் பிளேஸ், கொட்டாஞ்சேனை, கொழும்பு 13*

*25.5.2022*

# லண்டனில் நடைபெறும் மலையக இலக்கிய மாநாடு: பெருமகிழ்வும், வாழ்த்துகளும், சில நினைவுகளும்

## தெளிவத்தை ஜோசப்



இலங்கையின் மத்திய மலை நாட்டில் பிரிட்டிஷாரின் பெருந் தோட்டத்துறை அறிமுகத் தால் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டிவரப் பட்ட தென்னிந்தியத் தமிழ் மக்களே மலையக மக்கள் என இன்று அடையாளம் காணப்படும் தேசிய சிறுபான் மைத் தமிழ் மக்கள்.

பெருந்தோட்டத்துறைக்கான உழைப்புச் சக்தியாக 1817 இலிருந்து கொண்டுவரப்பட்ட இவர்கள் மலைநாட்டின் குளிருக்குள் அடைக்கப்பட்டு, குளிர்சாதனப் பெட்டிக்குள் இடப்பட்ட பொருட்கள்போல் அசைவற்று உறைந்து போய்க்கிடந்தனர்.

அடக்குமுறையும், உழைப்பும், உதாசீனமும், துன்பதுயரங்களுமே இவர்களது வாழ்க்கையாக இருந்தும்கூட மலையகம் நோக்கிய இம்மக்களின் வரவு அதிசயிக்கவைக்கும் விதத்தில் அதிகரித்தே சென்றுள்ளதை அரச அறிக் கைகள் நிரூபிக்கின்றன. (1850 இல் 10000ஆகவிருந்த இவர்களின் தொகை 25 வருடங்களுக்குள் இரண்டு லட்சமாக அதிகரித்து 1931இல் எட்டு லட்ச மாக இருந்ததாக தொழிற்திணைக்கள அறிக்கை குறிக்கிறது.)

கலை, இலக்கியம், நாகரிகம் என்று கலாசாரத்தின் எல்லா அம்சங்களும் உறைந்துபோய்க்கிடந்த மலையகத்தில் ஒரு நூற்றாண்டு பயங்கர மௌனத்தின் பின் ஒரு புயலெனக்கிளம்பியவர் நடேசய்யர். தங்களின் பலம் அறியாமல், தங்கள் உழைப்பின் சக்தி அறியாமல் மௌனித்துக்கிடந்த

மக்கள்கூட்டத்தின் அசைவின்மூலம் தோட்டத்து வெள்ளைத் துரை மார்களுக்கும் தோட்டத்தில் துரைத்தனம் புரிந்த கங்காணிகளுக்கும் கறுப்புத் துரைமார்களுக்கும் ஒரு சவாலாக, ஒரு திகிலாகத் திகழ்ந்தவர் அய்யர். மலையகத்தின் தொழிற்சங்க வரலாற்றின் அரசியல் நடவடிக் கைகளில் எழுத்து முயற்சிகளில் இடைவிடாமல் ஈடுபட்டுழைத்தவர் நடேசய்யர்.

திரு. ராமசாமி சேர்வையின் சரிதம் 1930 இல் அய்யரால் எழுதப்பட்ட மலை யகத்தின் முதல் சிறுகதையாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

கோ.நடேசய்யரின் காலத்தில் மலையக அரசியல், சமூக விழிப்புணர்வுக் கான செயற்பாட்டு முயற்சிகள் பெருமளவுக்கு நடந்தன. என்றாலும், மலை யைக இலக்கியம் என்பதற்கான மறுமலர்ச்சியை அதன் முழு வீச்சுடனும் அர்த்தத்துடனும் 1960களை ஒட்டிய காலங்களிலேயே நாம் காண முடிகிறது.

அறுபதுகளின் ஆரம்பம் வரையிலுங்கூட இந்த மக்கள் அரசியல்ரீதியாக அந்நியர்கள், சமூகரீதியாக கூலிகள், இனரீதியாக அடக்கப்படவேண்டிய தமிழர்கள் என்று வரலாற்றில் அனாதைகளாக, அநாமதேயர்களாக விடப்பட்டவர்கள்.

1970 களில் ராமசாமி காவியம் எழுதிய ஸ்ரீதரன், 'இந்த ராமசாமி மனிதனா கக் கருதப்பட்டதற்கான சரித்திரம் இல்லை.தேயிலைச் செடிக்குள் எல்லா மிருக்கும் என்று நம்பிக் கடல் கடந்த சீவராசிகளின் சந்ததியில் வந்தவன் மனிதனாக முடியுமா? ' என்று தனது சிறுகதையைத் தொடங்கும் இவர் 'சரித்திரத்துக்குத் தெரியாத இந்த ராமசாமி ' என்று முடிக்கிறார்.

வரலாற்றில் அநாமதேயர்களாக விடப்பட்ட இம்மக்களை இலங்கையிலும் உலக அரங்கிலும் அறியப்பட்டவர்களாக, வரலாற்றில் வாழ்பவர்களாக அடையாளப்படுத்திய மகிமை மலையக இலக்கியத்திற்குரியது. தமிழ் இலக்கியம், ஈழத்தமிழ் இலக்கியம் என்னும் பெரும் பரப்பில் மலையக இலக் கியம் என்றும் பேசப்படும் அளவிற்கு இம்மலையக மக்கள் பற்றிய எழுத் துகள் அழுத்தமாகவும் தனித்துவமானதாகவும் தன்னை நிலைநிறுத்தி வளர்கின்றது. மலையகம் என்ற உணர்வுடனும் மலையக மக்கள் என்னும் உறவுடனும் மேற்கிளம்பிய இவ்வெழுத்துக்களின் எழுச்சிக்கும் வளர்ச்சிக் குமான வழிகாட்டிகளாக நின்றவர்கள், கைவிளக்குடன் வழித்துணையாக வந்தவர்கள் என்று அனைவரையும் இந்த மலையக இலக்கிய மாநாடு மதிக்கிறது, போற்றுகிறது, ஆய்வு செய்து அறிமுகப்படுத்தி வளரச் செய்கிறது என்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

பெருங்கடலில் சிறு துரும்பென மலையக இலக்கியத்துடன் நானும் மிதந் துள்ளேன் என்னும் நினைவுகளுடன் இந்த மாநாட்டு ஏற்பாட்டாளர்கள்

அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதிலும் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

தங்களுடைய ஆதிக்க விஸ்தரிப்புக்காகவும் பொருளாதார வளர்ச்சிக்கா கவும் உழைப்புச் சக்தியாக-கூலிகளாகக்கூட்டிவந்த இம்மக்களின் சந்ததியினரை, ஒரு நூற்றைம்பது ஆண்டு காலத்தின் பின் அறுபதுகளின் பிற்பகுதியில் எதுவிதமான சட்டப்பாதுகாப்போ இருத்தலுக்கான உத்த ரவாதமோ இல்லாமல் அநாதரவாக விட்டு ஓடிப்போன வெள்ளைக்கா ரர்களின் தேசத்துத் தலைநகர் லண்டனில் இம்மாநாடு நடைபெறுகிறது என்பது மகிழ்வைத்தருகிறது.

இந்த மக்களைப்போலவே இந்த மக்கள் பற்றிய எழுத்துகளும் இலக்கி யமும் பெரும் அலைக்கழிப்பிற்கும் அசட்டைகளுக்கும் அதிகார இலக்கிய அடக்குதல்களுக்கும் உள்ளாகிக்கிடந்த சூழலில் மலையக இலக்கியம் பற்றிய அறிமுகத்தையும் அதன் மீதான ஆர்வத்தையும் அது பற்றிய தேடல்களையும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்படுத்திய பதுளை மு.நித்தி யானந்தனின் செயற்பாடுகள் மிகப்பெரியவை, சாதனை மிக்கவை! யாழ் வைகறையூடாகத் தொடங்கிய மலையக இலக்கியப் பணிகளின் தொடர் செயற்பாடுகள் இவை. நித்தியுடன் வைகறையில் இணைந்து லண்டன்வரை உடனிருந்து இயங்கும் ஓவியர் கே.கே.ராஜாவும் நன்றிக் குரியவரே.

மு.நித்தியானந்தனும் எச்.எச்.விக்ரமசிங்கவும் தொகுத்து வழங்கும் சி.வி.யின் மலையக அரசியல் தலைவர்கள் என்னும் நூல் இந்த மாநாட்டில் வெளியிடப்படுகிறது என்பதும் மகிழ்வைத் தருகின்றது.

மறைந்த மலையக எழுத்தாளுமைகளின் அரங்குகள், நூல் வெளியீடு, இருபத்தைந்துக்கும் மேற்பட்ட மலையக நூல்கள் பற்றிய ஆய்வுகள், விமர்சனங்கள் என மலையக இலக்கிய மாநாடு கலக்கப்போகிறது என்னும் நினைவே இம்மாநாட்டு ஏற்பாட் டாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கூறி அடிதொழ விழைகிறது.

'அரசும் அதன் தத்துவமும், அரசியல் நெறிமுறைகளும் நேற்றைச் சார்ந் தவை. எழுத்தும் இலக்கிய மொழியும் எதிர்த்துத்தாக்கும் போர்க்கருவி போன்றது. அதன் கூர்மையும் வேகமும் அதன் பேசுபொருளை மையமாகக் கொண்டவை. அவை இன்றையும் நாளையும் நாளை மறு நாளையும் என்னும் எதிர்காலத்தைச் சார்ந்தவை' என்னும் ரஷ்யக் கவிஞர் ஜோசப் பிராட்ஸ்கியின் நினைவுகளுடன் உங்கள் அனைவருக்குமான எனது பாராட்டுகள், நன்றிகள் , வாழ்த்துகள்!

•••

# லண்டனில் மலையக இலக்கிய மாநாடு - 2022

## மு.நித்தியானந்தன்



இலங்கையில் மலைநாட்டுத் தேயிலைத் தோட்டங்களில் பெரும் சுரண்டலுக்குள்ளாகும் தொழிலாளர்கள் பற்றி 1974 ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் இயங்கும் War on Want என்ற அமைப்பின் சார்பில் Edith Bond இலங்கையில் ஆய்வு மேற்கொண்டு The State of Tea என்ற தலைப்பில் வெளியிட்ட ஆய்வறிக்கை இங்கிலாந்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. Granada television ஒளிபரப்பிய தேயிலைத் தோட்ட மக்களின் வாழ்நிலை பற்றிய நிகழ்ச்சியும் உலக அரங்கில் மலையகத் தொழிலாளரின் வாழ்நிலையினை வெளிப்படுத்தியது. இலங்கை என்றால் தேயிலை என்றும் தேயிலை என்றால் அங்கு வாழும் தொழிலாளர்களின் ஈனநிலைதான் என்ற சித்திரமே இங்கிலாந்திலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் நிலவியது.

இலங்கையில் 1980களில் ஈழவிடுதலைப்போராட்டம் வெடித்தெழுந்த போது உலக அரங்கில் ஈழத்தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் முன்னுரிமை பெற்றது.


இந்நிலையில் , ஐரோப்பாவின் இலக்கியச் சந்திப்பு மலையக இலக்கியம் பற்றிய பிரக்ஞையை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்துள்ளது. மலையகத் தமிழர்களின் நிலை, தாயகம் திரும்பிய தமிழர்களின் நிலை பற்றி பேர்லின் இலக்கியச் சந்திப்பில்(1989) நிகழ்ந்த உரையாடல் முக்கி யமானது.

நடேசையர் நூற்றாண்டு நிறைவையொட்டி (1987)பேர்லினில் அப்பெரியார் நினைவு கூரப்பட்டமை மலையகம் பற்றிய சிந்தனையை புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் எடுத்துச் செல்ல உதவிற்று.



மலையகத்தின் சிறுகதைச் சிற்பியான அமரர் என்.எஸ்.எம்.ராமையா அவர்க ளின் 'கோயில்' என்ற சிறுகதை இலக்கி யச் சந்திப்பில் கலைச்செல்வனால் வாசிக்கப்பட்டு, அக்கதை ஜேர்மனிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டதை யும் நினைவு படுத்துவது பொருந்தும்.

பாரிசில் நிகழ்ந்த என்.எஸ்.எம்.ராமையா வின் நினைவுப்பேருரையும், 'மலையகப் பரிசுக்கதைகள்' நூல் வெளியீடும் (1995) பாரிசில் இடம்பெற்ற முக்கிய மலையக இலக்கிய நிகழ்வுகளாகும். நெதர் லாந்திலும் 'மலையகப் பரிசுக்கதைகள்' வெளியீடு நிகழ்த்தப்பட்டு, மலையக எழுத்தாளர்கள் பரந்த அறிமுகம் பெறுவதற்கான வாய்ப்பை நல்கியது.லண்டனில் மாத்தளை சோமுவின் நூல்களை புதினம் ராஜகோபால் வெளியிட்டு, அவரது பல நூல்களை லண்டனில் அறிமுகப்படுத்த உதவியிருந் தார். மலையக இலக்கியம் பற்றிய மாத்தளை சோமு அவர்களின் இலக்கிய உரையும் பொருள் பொதிந்ததாக இருந்தது.




லண்டனில் நடை பெற்ற ' மலையகப் பரிசுக் கதைகள்' நூல் வெளியீட்டில் பேராசிரியர். சிவசேகரம், ராஜேஸ்வரி பாலசுப்ரமணி யம், நடிகர் சிலோன் சின்னையா ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

'மலையகத்தின் நூற்றாண்டுத்துயர்' என்ற தொனிப்பொருளில் லண்டனில் நடைபெற்ற கருத்தரங்கில் தெளிவத்தை ஜோசப், விஜய சிங்கம், வழக்கறிஞர் செல்வராஜ் ஆகியோர் பங்காற்றி சிறப்புச் சேர்த்தனர். லண்டனில் இர.சிவலிங்கம் அவர்களின் மறைவிற்கான

அஞ்சலி நிகழ்வில் எஸ்.முத்தையா, எஸ்.வி.ராஜதுரை, எம்.நேமிநாதன், என்.சுசீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டமை மலையக் கல்விமான் ஒருவருக்கு புகலிட தமிழர் சமூகம் அளித்த பெருங்கௌரவமாக அமைந்தது.

நெதர்லாந்தில் 'கலைஒளி' முத்தையாபிள்ளை அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவுதினப்பேருரையை (1998) கலாநிதி. இரத்தினம் நித்தியானந்தன் நிகழ்த்திச் சிறப்பித்தார்.

நோர்வேயில் நடைபெற்ற இலக்கிய சந்திப்பு நிகழ்வில் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் 50 ஆண்டு நிறைவு குறித்த உரையாடல் ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் வி.நடராஜா தலைமையில் சிறப்புற நிகழ்ந்தது.




லண்டனில் நடைபெற்ற 'கூலித்தமிழ்' வெளியீட்டு நிகழ்வில் அம்ஷன்குமார், வழக்கறிஞர் செ.சிறிக்கந்தராசா, இரா. ராமலிங்கம், எம்.என்.எம்.அனஸ், மாதவி சிவலீலன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

'மலையகத்தின் எழுச்சித்தலைவர் பெ.சந்திரசேகரம்' என்ற நூலின் வெளியீட்டுவிழா ராம்ராஜ் அவர்களின் தலைமையில் லண்டனில் நடைபெற்றபோது, இலங்கையிலிருந்து எச்.எச்.விக்ரமசிங்க அவர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மலையகம் குறித்த இந்நிகழ்வுகளின் உச்சகட்ட வளர்ச்சியின் வெளிப்பாடாக ஜூன் மாதம் 11 ஆம் திகதி விம்பம் அமைப்பு ஒழுங்கு செய்திருக்கும் முழுநாள் மலையக இலக்கிய மாநாடு திகழ்கிறது.

காத்தாயி, கோகிலம் சுப்பையா, இர.சிவலிங்கம், சோ.சந்திரசேகரம் சி.வி.வேலுப்பிள்ளை,தமிழோவியன், சாரல்நாடன் ஆகியோரின் நினைவரங்குகளில் மலையகம் சார்ந்த 26 நூல்கள் அறிமுகம் பெறுகின்றன. நாவல், சிறுகதை, கவிதை, கூத்து, அரசியல், சமூகவியல், சட்டம் சார்ந்த பல்துறை நூல்கள் இந்த மாநாட்டில் ஆய்வுக் கெடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

நோர்வே, டென்மார்க், பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து உரைஞர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

ந.சரவணன், க.ஆதவன், கரவைதாசன், சுகன், டாக்டர்.தம்பிராஜா, யமுனா ராஜேந்திரன்,வழக்கறிஞர் செ.சிறிக்கந்தராசா, வி.சிவலிங்கம்,பால சுகுமார், ப.சந்தோஷ், எஸ்.தினேஷ்குமார், எம்.என்.எம்.அனஸ், எம்.பௌசர், ராகவன்,பெ.சிவஞானம், மயூரன், மாதவி சிவலீலன், நவஜோதி யோகரட்னம்,தோழர் வேலு, கோகுலரூபன், நா.சபேசன்,மாஜிதா, அஞ்சனா, பாரதி சிவராஜா, வேணி சதீஸ், பூங்கோதை, மீனாள் நித்தியானந்தன் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்து அணி சேர்க்கிறார்கள்.

சி.வி.வேலுப்பிள்ளை அவர்களின் 'மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்' என்ற நூல் வெளியீடு இம்மாநாட்டின் பிரதான நிகழ்வாக அமைகிறது. சி.வி.யின் இக்கட்டுரைகள் தினகரனில் வெளியாகி,65 ஆண்டுகள் கடந்த நிலையில், மு.நித்தியானந்தன், எச்.எச்.விக்ரமசிங்க ஆகி யோர் இந்த நூலைப் பதிப்பித்துள்ளனர்.

சாம் பிரதீபனின் 'மெய்வெளி' நாடக அரங்கின் தயாரிப்பில் 'காத்தாயி காதை' நாடகம் மாநாட்டின் முக்கிய கலை நிகழ்வாக மேடையேறுகிறது. றஜீதா பிரதீபன் நாடகத்தில் பிரதம பாத்திரமேற்றுச் சிறப்பிக்கிறார்.

மலையகச் சிறார்களின் ஓவியக்கண்காட்சியும் மலையக நூல், சஞ்சிகைகள் கண்காட்சியும் இம்மாநாட்டின் மற்றுமிரு முக்கிய அம்சங்களாக இடம்பெறவிருக்கின்றன.

இலங்கையிலிருந்து மலையக இலக்கிய செயற்பாட்டாளர் எச்.எச்.விக்ரமசிங்க பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மாநாட்டைச் சிறப்பிக்கவிருக்கிறார்.

இம்மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கு ஐரோப்பாவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் இலக்கிய நண்பர்கள் தெரிவித்த ஆதரவுக்கு நமது நன்றிகள் உரியன.

• • •




நாவல், சிறுகதை கருத்தரங்கு

(முழுநாள் நிகழ்வு)

காலை 10.00 மணி - இரவு 8.30 மணி

20 ஜுலை 2022

@ Trinity Centre, East Ham
London E12 6SG

TEL: K K Rajah: + (44) 07736 908 421
M Nithiyananthan: + (44) 07540 004 714
S Santhan: + (44) 07883 573 337

VIMBAM

## அமர்வு: 1 - காத்தாயி அரங்கு (காத்தாயி முத்துசாமி)



விடுதலை இயக்கப்போராளி ஒருவருக்குப் புகலிடம் அளித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் 1994ஆம் ஆண்டில் இலங்கை பொலிசாரால் காத்தாயி முத்துசாமி கைது செய்யப்பட்டார்.பதுளை லுணுகலையில் அடாவத்தை தோட்டத்தைச் சேர்ந்த காத்தாயி மலையகத் தோட்டத் தொழிலா ளியாவார். மட்டக்களப்பிலிருந்து விடுதலைப்போராளி ஒருவர் பதுளைக்கூடாக தப்பிச் செல்வதற்கு தனது லயத்தில் தங்கி நின்று தப்புவதற்கு தங்குமிடமும் உணவும் வழங்கியிருந்தார் என்பது அவர்மீதான குற்றச்சாட்டாகும். வழக்கில் அவருக்குத் தண்டனை வழங்கப்பட்டு வெலிக்கடைச் சிறையில் அவர் சிறைவாசம் அனுபவித்தார். இனவாதப்புறக்கணிப்புடன், யாரும் அக்கறை காட்டாத நிலையில் சிறைக்குள் அவர் கடுமையான நோய்வாய்ப்பட-நேர்ந்தது. இறுதியில் அவர் புற்றுநோய்க்காளாகி, படுக்கைப்புண்களுடன்,பெருந்-துயருக்காளாகி, கொழும்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மரணமடைந் தார். நாற்பத்தொன்பது வயதில் கைது செய்யப்பட்டு, 19 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்து சிறையிலேயே, தனது 68 வயதில் அவர் மரணித்தது கொடுந்துயர். யுத்தம் முடிந்து, விடுதலைப்புலிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டு, புனர்வாழ்வு வழங்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டபின்னரும், காத்தாயியின் நிலை யாருடைய கவனத்துக்கும் கொண்டுவரப்படாத நிலையில் மூன்றரை ஆண்டுகள் யுத்தம் முடிந்தும் சிறையிலிருந்தார். மலையகத் தலைமைகளோ மனித உரிமை இயக்கங்களோ காத்தாயியின் நிலையைக் கருத்தில் கொள்ளவில்லை. நாதியற்ற பெண்ணாக மறைந்த காத்தாயி என்ற மாதரசிக்கு இந்த அரங்கு.

**தலைமை: மு.நித்தியானந்தன்**

1. **தோட்டத் தொழிலாளரின் வீரப்போராட்டம்**
   **- பி.பெரியசாமி**
   **உரை: எஸ்.தினேஷ்குமார்**
2. **மலைகளைப் பேச விடுங்கள்**
   **- மல்லியப்புசந்தி திலகர்**
   **உரை: ந.சரவணன்**
3. **வெந்து தணியாத பூமி - வரதன் கிருஷ்ணா**
   **உரை: எம்.பௌசர்**



மு.நித்தியானந்தன்



எஸ்.தினேஷ்குமார்



ந.சரவணன்



எம்.பௌசர்

# அமர்வு: 2 - இர.சிவலிங்கம் அரங்கு



'இளைஞர் தளபதி', 'சொல்லின் செல்வர் ' என்றெல்லாம் மலையகத்தில் அழைக்கப்பட்ட இர.சிவலிங்கம்(1932-1999) மலையகத்தின் கல்விமானாகவும், சட்டத்தரணியாகவும், சிறந்த ஆங்கில, தமிழ் சொற்பொழிவாளராகவும், அரசியல், சமூக செயற்பட்டாளராகவும் திகழ்ந்தார். ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் பயின்று, சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் எம்.ஏ.பட்டம் பெற்று, ஆசிரியராகத் தன் வாழ்வை ஆரம்பித்தார்.

ஹைலண்ட்ஸ் கல்லூரியின் அதிபரானார்.மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம், மலையக இளைஞர் முன்னணி ஆகிய அமைப்புகளின் மூலம் மலையக இளைஞர் மத்தியில் சமூக எழுச்சியை உருவாக்கினார். சிறிமாவோ அரசின் காலத்தில் தோட்டப்பாடசாலைகளைப் பொறுப்பேற்கும் கல்வி அதிகாரியாகப் பணியாற்றினார். பின்னர், LLB பட்டம் பெற்று சட்டத்தரணியானார்.1983 இனக்கலவரத்தின் பின்னர் தமிழகம் சென்ற இர.சிவலிங்கம் தாயகம் திரும்பிய மலையக மக்களின் நலன்களைப்பேணுமுகமாக கோத்தகிரியில் அரும் பணியாற்றினார்.

Exodus என்ற ஆங்கிலச் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து தாயகம் திரும்பிய மக்கள் இந்தியாவில் படும் அல்லல்களை இந்திய அரசிற்கும் வெளி உலகிற்கும் எடுத்துரைக்கும் பணியில் தீவிரமாக இயங்கினார்.

தாயகம் திரும்பிய மக்களுக்கான போராட்டத்தில் தமிழகத்தில் கைது செய்யப்பட்டு, செங்கற்பட்டு தடுப்புமுகாமில் கொடுமையான சிறைவாசம் அனுபவித்தார்.1999 இல் அவர் மறைந்தபோது, மலையகம் ஒரு கல்வி முன்னோடியை, தன்னலமற்ற தியாகியை இழந்தது.

---

**தலைமை : செல்லத்தம்பி சிறிக்கந்தராசா**

**4. எங்கள் தோட்டம் - கந்தப்பளை தாமரை யு.யோகா**
**உரை: கோகுலரூபன்**

**5. கூலித்தமிழ் - மு.நித்தியானந்தன்**
**உரை: தோழர் எஸ்.வேலு**

**6. இருபத்தோராம் நூற்றாண்டில் மலையகத் தமிழர் எதிர்நோக்கும் சவால்கள் - ச.கீத பொன்கலம்**
**உரை: கரவைதாசன்**

**7. Tea and Solidarity - Mythri Jegathesan**
**உரை: எஸ்.ராகவன்**


எஸ்.சிறிக்கந்தராசா


கோகுலரூபன்


தோழர் ச.வேலு


கரவைதாசன்


ராகவன்

# அமர்வு: 3 கோகிலம் சுப்பையா அரங்கம்



தொழிற்சங்கவாதி, மேடைப்பேச்சாளர்,எழுத்தாளர், நாவலாசிரியை, மொழிபெயர்ப்பாளர், ஓவியர், நுண்கலைப்போதனாசிரியர் என்ற பன்முக ஆளுமை கொண்ட கோகிலம் சுப்பையா (1925-2011) மலையகப் பெண்கள் வரலாற்றில் நினைவுகூரப்படவேண்டியவராவார். திருச்சியில் பிறந்த கோகிலம் சுப்பையா பதுளையின் முதலாவது பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்ட எஸ்.எம்.சுப்பையா அவர்களைத் திருமணம் செய்து, மலையகத்திற்குப் பரிச்சயமாகிறார்.

1954 இல் தோட்டத்துப்பெண்கள் முன்னேறவேண்டும் என்ற அடிப்படையில் தேயிலைத் தோட்டப்பெண் தொழிலாளர்கள் மத்தியில் மாதர் சங்கம் அமைத்துச் செயற்பட்டார். 1956 இல் செக்கோஸ்லவாக்கியாவில் நடைபெற்ற உலகப் பெண் தொழிலாளர் மாநாட்டில் பங்கு பற்றி உரையாற்றியுள்ளார். செக்கோஸ்லாவிய தமிழ் அறிஞர் கமில் ஸ்வலபில் அவர்களைச் சந்தித்து, அவரின் ஆலோசனையில்-தான் மலையகப் பெண்கள் படுந்துயரை மையமாக வைத்து 'தூரத்துப்பச்சை' என்ற மகத்தான நாவலை எழுதினார். மலையகத்தின் நாவல் இலக்கியத்தில் இந்த நாவல் முதன்மை ஸ்தானத்தில் வைத்து இன்றும் போற்றப்பட்டுவருகிறது.இந்நா-வலை Mirage என்ற தலைப்பில் தானே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கி-றார்.'மறுமலர்ச்சிப்பாதையில் மாதர்கள்' என்ற இவரது பிரசுரம் மலையகப் பெண்ணியச் சிந்தனை வரலாற்றில் தனி முக்கியத்துவம் பெறுகிறது.

அமெரிக்காவில் சிக்காகோவில் பல கலை மையங்களில் போதனாசிரியராகப் பணியாற்றி, அமெரிக்காவையே பிற்காலத்தில் தனது வாழிடமாகக்கொண்டு, முதுமையில் அங்கேயே மறைந்தார்.

**தலைமை : மீனாள் நித்தியானந்தன்**

**8. பெருவெடிப்பு மலைகள் - எஸ்தர்**

**9. முகவரி தேடும் மனிதர்கள் - கோணமுட்டாவையூர் இரா.இராஜகோபால்**

**- நவஜோதி யோகரட்னம்**

**10. குதிரைகளும் பறக்கும் - பதுளை சேனாதிராஜா**

**- பூங்கோதை**

**11. விரும்பித் தொலையும் ஒரு காடு - பிரமிளா பிரதீபன்**

**- மாதவி சிவலீலன்**



மீனாள்



நவஜோதி



பூங்கோதை



மாதவி சிவலீலன்

# அமர்வு: 4 - சோ.சந்திரசேகரம் அரங்கு



இலங்கையின் கல்வித்துறை வரலாற்றில் தனித்துவ முத்திரையைப் பொறித்துச் சென்றிருக்கும் சோ.சந்திரசேகரம் (1944-2022) பதுளை மண்ணின் மைந்தர். மகாஜனகல்லூரியில் பயின்று, பேராதனைப்பல்கலைக்கழகத்தில் B.Ed பட்டம் பெற்று, ஜப்பானில் ஹிரோஷிமா பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப்பட்டத்தைப் பெற்றார். பல்கலைக்கழகக் கல்விப் புலமே அவரது உயர்-கல்விப் பட்ட ஆய்வின் மையமாக அமைந்தது. அவரது வாழ்வு முழுவதும் கல்விப் பணி சார்ந்ததாகவே அமைந்தது. ஆங்கிலத்திலும் தமிழிலும் அவர் எழுதி வெளியிட்ட முப்பதிற்கும் அதிகமான நூல்கள் கல்விப்பிரச்னைகள் சார்ந்த கேள்விகளுக்கு நல்விளக்கம் தருவனவாகும். இலங்கையின் கல்விசார்ந்த அனைத்து அமைப்புகளிலும் அவர் அங்கம் வகித்து அரிய ஆலோசனைகளை வழங்கி வந்திருக்கிறார். மலையகத்திற் கெனத்தனிப்பல்கலைக்கழகம் வேண்டும் என்ற கோரிக்கை மலையகத்தில் உரத்து ஒலித்ததின் மூலவேராக அவர் திகழ்ந்தார். இந்த நாட்டின் வளத்திற்கு தங்கள் பேருழைப்பை நல்கியவர்கள் என்ற உரிமையின் பேரில் கேட்கிறோம் என்று வலியுறுத்தியவர்.

ஆழ்ந்த சிந்தனையும் விரிந்த பார்வையும் சமூகத்தின் அனைத்துப்பிரச்னைகளையும் கூர்மையாக அவதானிக்கும் பண்பும் கொண்ட எளிமையான மனிதராக அவர் திகழ்ந்தார். கல்வியை சகல மட்டத்திலும் கொண்டு செல்லும் பணியை அவர் அயராது மேற்கொண்டார்.

**தலைமை: க.ஆதவன்**

**12. இலங்கை இந்தியர் வரலாறு - சோ.சந்திரசேகரன்**

**13. Endless Inequality - யோகேஸ்வரி விஜயபாலன்**

**உரை: டாக்டர்.எஸ்.தம்பிராஜா**

**14. நீங்காத நினைவுகளில் ... - எம்.வாமதேவன்**

**உரை: இர. இராமலிங்கம்**

**15. மலையகமும் மறுவாழ்வும் - தமிழகன்**

**உரை: பெரி.சிவஞானம்**



க.ஆதவன்



டாக்டர். எஸ்.தம்பிராஜா



இர. இராமலிங்கம்



பெரி.சிவஞானம்

# அமர்வு: 5 - சி.வி.வேலுப்பிள்ளை அரங்கம்



சி.வி.என்று அழைக்கப்படும் சி.வேலுப்பிள்ளை(1914-1984) இலங்கை மலையகத்தில் தோன்றிய ஆங்கிலக்கவியாவார். 1934 இல் வங்கக்கவியரசர் தாகூர் இலங்கைக்கு விஜயம் செய்தபோது,அவரது முன்னிலையில் தான் இயற்றிய Vismadgenee (விஸ்மாஜினி) என்ற நாடக நூலை எழுதிச் சமர்ப்பித்து, அவரது ஆசியைப்பெற்றவர். Wayfarer(1949), In Ceylon's Tea Garden(1954),Born to Labour(1970) ஆகியன இவர் எழுதி வெளியான ஆங்கிலப்படைப்புகளாகும். வீடற்றவன்(1981), இனிப்படமாட்டேன் (1984), வாழ்வற்ற வாழ்வு (2001) ஆகியன இவர் தமிழில் எழுதிப் பிரசுரம் பெற்ற நாவல்களாகும். மலைநாட்டுப்பாடல்கள்(1983) தொகுப்பு இவரது வாய்மொழி இலக்கிய ஈடுபாட்டிற்குச் சான்றாகும். இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத்திற்கு 1947இல் தலவாக்கொல்லை பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.1952 இல் மலையக மக்களின் பிரஜாவுரிமை மறுக்கப்பட்டதை எதிர்த்து, பிரதமரின் வாசஸ்தலத்தில் சத்தியாக்கிரகப்போராட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தினார். மலையகக் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில், கலாநிதி க.கைலாசபதியினால் 'மக்கள் கவிமணி' என்று பட்டம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டார். இறுதிவரை தொழிலாளர் தேசிய சங்கத்தினை வழிநடத்தும் ஆத்மசுத்தி மிக்க தொழிற்சங்கவாதியாகவே திகழ்ந்தார். மலையகத்தின் நவீன இலக்கியத்திற்கு வித்திட்ட மலையக இலக்கியப் பிதாமகனாக சி.வி. திகழ்கிறார்.

**தலைமை : வி.சிவலிங்கம்**

16. **தேத்தண்ணி: (சிங்களத்திலிருந்து தமிழில்) - இரா.சடகோபன்**
    **உரை: பரராஜசிங்கம் சந்தூஷ்**
17. **கள்ளத்தோணி - ந.சரவணன்**
    **உரை: யமுனா ராஜேந்திரன்**
18. **மலையைக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும் - சி.வி.வேலுப்பிள்ளை**

**வெளியீட்டுரை: மு.நித்தியானந்தன்**

**பிரதி வழங்குதல்**

**பிரதம விருந்தினர் உரை: திரு. எச்.எச்.விக்ரமசிங்க**



வி.சிவலிங்கம்



பரா. சந்தூஷ்



யமுனா ராஜேந்திரன்



மு.நித்தியானந்தன்



எச்.எச்.விக்ரமசிங்க

# அமர்வு: 6 தமிழோவியன் அரங்கு



ஐம்பதுகளில் கவிதை உலகில் கால் பதித்த தமிழோவியன் (1938-2006), ஐந்து தசாப்தங்களாக மலையகக் கவிதையுலகில் கோலோச்சினார்.

தன் வாழ்முழுதும் பதுளையையே வாழ்விடமாகக்கொண்டு வாழ்ந்த தமிழோவியன் சுயமரியாதை இயக்கத்தால் ஈர்க்கப்பட்டிருந்தார். ஆறுமுகம் என்ற இயற்பெயரைக்கொண்டிருந்த தமிழோவியன் தெளிவத்தை தோட்டத்தில் மன்றம் அமைத்தும் நூலகத்தை உருவாக்கியும் மலையக மக்கள் மத்தியில் சீர்திருத்தம் காண இறுதிவரை அயராது உழைத்தார். தோட்டத்து களஞ்சியக் காப்பாளராகப்பணி புரிந்த தமிழோவியனின் கவிதைகள் நீண்ட காலத்தின் பின்னரே 2000 ஆம் ஆண்டு தொகுக்கப்பெற்று, சாகித்திய மண்டலப் பரிசிலையும் பெற்றுக்கொண்டது. திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கையில் ஈடுபாடு மிக்க தமிழோவியன் கண்ணதாசன், நெடுஞ்செழியன், ஆசைத்தம்பி ஆகியோருடன் நெருக்கமான உறவு கொண்டிருந்தார். பாரதிதாசனை தனது மானசீகக் குருவாக வரித்திருந்தார். தனது சமுதாயப்பணியின் வழிகாட்டியாக கே.ராஜலிங்கம் அவர்களைக் கருதியிருந்த தமிழோவியன்சி.வி.வேலுப்பிள்ளை, கே.வெள்ளையன் ஆகிய தலைவர்களுடன் நல்லுறவு கொண்டிருந்தார். பதுளையின் சமூக , இலக்கியப்பணிகளில் இறுதிவரை அவர் அயராது ஊக்கத்துடன் செயற்பட்டிருந்தார்.

## தலைமை: வேணி சதீஸ்

19. **மழைக்காலத்து வெயில் - மு.சிவலிங்கம்**
    **உரை: மாஜிதா**

20. **கண்டிச் சீமையிலே - மாத்தளை சோமு**
    **உரை: பாரதி சிவராஜா**

21. **பால் வனங்கள் - மலரன்பன்**
    **உரை: அஞ்சனா**


வேணி சதீஸ்


மாஜிதா


பாரதி சிவராஜா


அஞ்சனா

# அமர்வு: 7 - சாரல்நாடன் அரங்கம்



நல்லையா என்ற இயற்பெயரைப் பெற்றிருந்த சாரல்நாடன் (1944 -2014) நுவரெலியாவில் சிங்காரவத்தை தோட்டத்தில் பிறந்து, ஹைலண்ட்ஸ் கல்லூரியில் இர. சிவலிங்கம் அவர்களிடம் பயின்று, சமூக, இலக்கியத்துறைக்குள் ஈர்க்கப்பட்டவர். தேயிலைத் தோட்ட டீமேக்கராக உயர் பதவி வகித்த சாரல்நாடன் ஆக்க இலக்கியத்திலும் இலக்கிய ஆராய்ச்சியிலும் சேர்ந்தே உழைத்து வந்திருக்கிறார். கவிதை, சிறுகதை, குறுநாவல், நாவல், வரலாற்று ஆய்வு, இலக்கிய வளர்ச்சி, சமூக வரலாறு என்று பல துறைகளில் தனது ஆற்றலை வெளிப் படுத்தியுள்ளார். 'தேசபக்தன் கோ.நடேசய்யர்' என்ற நடேசய்யர் வரலாற்று நூல் சாரல்நாடனுக்கு மலையக இலக்கிய வரலாற்றில் நிலையான அந்தஸ்தைத் தேடிக்கொடுத்தது. இலங்கை சாகித்ய மண்டலப்பரிசினையும் பெற்றுக்கொடுத் தது. மலையக வாய்மொழிப்பாடலில் ஆர்வம் கொண்டிருந்த சாரல்நாடன் மலை யக நாட்டார் பாடல்களையும் தேடித் தொகுத்து வழங்கியுள்ளார்.மலையக இலக்கிய வளர்ச்சியை நெறிப்படுத்தும் நோக்கில் இவர் ஆக்கிய ஆய்வு நூல்கள் ஆதாரமான ஆவண நூல்களாகச் சிறப்புறுகின்றன. இவர் ஆக்கிய 22 நூல்களும் சாரல்நாடனின் இலக்கிய, சமூக, வரலாற்றுத் துறை ஞானத்தையும் ஆய்வுத் தேடலையும் வெளிப்படுத்துகின்றன. 'வானம் சிவந்த நாட்கள்' என்ற நாவல் சாரல்நாடனின் மறைவிற்குப்பின்னரே வெளியாகி, அவருடைய படைப்பாற்றலை உறுதி செய்தது.

**தலைமை: நா.சபேசன்**

22. **அறுவடைக்கனவுகள் - அல் அஸூமத்**
23. **கறிவேப்பிலைகள் - தங்கவேல்**

    **உரை: மயூரன்**
24. **வண்ணச்சிறகு கவிதைகள் - அரு.சிவானந்தன்**
25. **மலைப்பாடல்கள் - சிவனு மனோகரன்**

    **உரை: சுகன்**
26. **காமன் கூத்து - பொன் பிரபாகரன்**

    **உரை: பால சுகுமார்**



நா.சபேசன்



மயூரன்



சுகன்



பால சுகுமார்

'மெய் வெளி'யின்

# காத்தாயி காதை

ஒற்றை விடுதலைக்கு
ஓராயிரம் உயிர் கொடுத்த
சிவந்த மண்ணொன்றின்
அறியப்படாத மானுடம் காத்தாயி!

கறுப்புச் சுவருக்குள்
வடிந்த கண்ணீர்களில்
கறள் ஏறிப்போன
சிறைக்கம்பிகள் சொல்லும்
பேசப்படாத துன்பியல் காத்தாயி!

அவள் காட்டிக்கொடுக்கப்பட்டாள்
இயேசு அல்ல!
துகிலுரியப்பட்டாள்
பாஞ்சாலி அல்ல!
சிறையிடப்பட்டாள்!
அலெக்சாண்டர் அல்ல!
பெரும் பாதாளம் ஒன்றில்
ஆயுள் முடித்துக் கொண்டாள்
எழுதப்படாத வரலாறு ஒன்றின்
எரிந்து கருகிய புத்தகம் காத்தாயி காதை!
அவள் குரலை நீங்கள் இதுவரை கேட்டதுண்டா?



**எழுத்துரு, நெறியாள்கை:**
சாம் பிரதீபன்

**உதவி நெறியாள்கை:**
றஜித்தா சாம் பிரதீபன்

**பங்கேற்கும் கலைஞர்கள்:**
சாம் பிரதீபன்,
றஜித்தா,
சுஜித், அலன், தருண்,
மகிழிதி, துஷா

**இசைப் பிரயோகம் :** பார்கவி

**அரங்கமைப்பு,
கைவினைப் பொருட்கள்
ஒப்பனை
வேட உடை, தயாரிப்பு:**
மெய்வெளி நாடகப் பயிலகம்

மெய் வெளி

Flyer Design : K K Rajah








## ஐந்து கவிதைத் தொகுப்புகளின் மீதான விமர்சன நிகழ்வு

'யுத்தம், காதல், வாழ்வின் சலிப்பு, கையாலாகாத்தனம், காலத்தின் கொடூரம், சின்ன விஷயங்களைக் கொண்டாடும் மனோநிலை, பண்பாடு,கலாசாரம் என்பனவற்றின் கேலிக்கூத்து என்பன பற்றிய அனுபவங்கள் தர்மினியின் 'அயலாள் கவிதைகள்' நூலில் மலர்ந்திருக்கின்றன. புலம்பெயர் வாழ்வின் வலியும் இயலாமையும் விரக்தியும் தர்மினியின் கவிதைகளில் இழையோடுகின்றன. உண்மைகளுக்கு நெருக்கமாக அவரின் கவிதைகள் அமைந்திருப்பது அவரது கவிதையின் சிறப்பு' என்று விமர்சகர் கஜமுகன் லண்டனில் சென்ற (14.5.22) நடைபெற்ற 'கவிதை வனைந்த உலகு' என்ற நிகழ்வில் கலந்து கொண்டு பேசியபோது தெரிவித்தார்.

கோகுலரூபன் தலைமையில் கிழக்கு லண்டனில் நடைபெற்ற கவிதை விமர்சன நிகழ்வில் 'செல்வி - சிவரமணி கவிதைகள்' பற்றி அஞ்சனா உரையாற்றிய போது, ' பெண்ணியவாதிகள் என்ற பதத்தை இன்று கூட சரிவர புரிந்து கொள்ள முடியாத சூழல் ஐரோப்பாவிலேயே நிலவும்போது எண்பதுகளில் யுத்த நெருக்கடிகளுக்குள் முற்போக்குச் சிந்தனைகளோடு போராடிய செல்வி, சிவரமணி போன்றோர் உன்னத நாயகிகளாகவே செயற்பட்டிருக்கிறார்கள்.




மனவலிமையுடனும், உத்வேகத்துடனும் இப்பெண்கவிகள் தங்கள் காலத்தில் செயற்பட்டவிதம் இன்றும் நமக்கு பெரும் மனவலிமையைத் தருகிறது' என்று குறிப்பிட்டார்.

'கடத்தலும் காணாமல் போதலும் கொலைகளும் மலிந்துபோன யுத்த சூழ்நிலையில் இப்பெண்மணிகள் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்து, மக்களிடமிருந்து வெளியேறிவிடாமல் தங்கள் உயிரை அர்ப்பணித்திருப்பது முக்கிய வரலாற்று செய்தியாகும்' என்று 'பனிமலர்' இதழாசிரியர் நா.சபேசன் தெரிவித்தார்.




'மலையக மக்கள்மீதான அக்கறை முக்கியமானது என்ற கருத்தினை வலியுறுத்தி, அந்த உறுதியை மேற்கொள்ளும் உத்வேகத்தை சி.கிருஷ்ணபிரியனின் 'மூதன்னையின் பாடல்' கவிதைகள் நமக்குள் ஏற்படுத்துகின்றன.ஒரு பொறுப்பற்ற சமூகத்தின்மீதான கோபத்தை வெளிப்படுத்தும் இவரது கவிதைகள், சிறியதுயரத்தையேனும் கடந்து செல்ல முடியாத எமக்கு எப்படி பசித்தவனை, நைந்து மெலிந்தவனை கடந்து செல்லமுடிகிறது என்ற ஏக்கத்தில் முடிகின்றன. ஆற்றாமைகளும் துயரங்களும் வாழ்வில் நிறைந்து போய்க்கிடந்தாலும், எல்லாத் துயரங்களுக்குப் பிற்பாடும் ஒரு வாழ்க்கை மீதமிருக்கிறது என்றும் அது மகிழ்ச்சிக்காக மாத்திரமே காத்திருக்கிறது என்றும் இவரது கவிதைகள் ஒலிக்கின்றன. நம்பிக்கை என்ற ஒற்றைக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு- இதுவும் கடந்து போகும் என்ற நம்பிக்கையை நம்முள் கிருஷ்ணபிரியன் விதைக்கிறார்' என்று வேணி சதீஸ் தனது விமர்சன உரையில் தெரிவித்தார்.

'மலையகத்தின் இடதுசாரிக்கவிஞராகத் திகழும் கிருஷ்ணபிரியன் மலையக மக்களின் விடுதலை நோக்கிய பயணத்தை வலியுறுத்தி, எளிமையான மொழியில், அனைத்து தரப்பினரையும் சென்றடையும் நோக்கில் தனது கவிதைகளை ஆக்கியிருப்பது சிறப்பானதாகும். மூதன்னை என்ற படிமம் மனதில் எத்தனையோ உணர்வுகளை எழுப்பிச் செல்கின்றன. மூதன்னையின் பாடல் என்ற தலைப்பே அற்புதமான உணர்வுகளை ஏற்படுத்துகின்றன' என்று 'நிறமற்ற மனிதர்கள்' சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியை பூங்கோதை தனது உரையில் தெரிவித்தார்.

'கருணாகரனின் காட்சிப்படுத்தல்களும் அலாதியான கற்பனையும் புதுமை நோக்கும் அழகியலும் அவரது கவிதைகளுக்கு புதிய மெருகு சேர்க்கின்றன. இரவு என்பதையே ஒரு மனிதனாக உருவகித்து தனது கற்பனை வீச்சை தனது 'இரவின் தூரம்' என்ற கவிதைத் தொகுப்பிலே நன்கு வெளிப்படுத்தியிருக்கிறார். கவிதையின் வடிவமும் பாடுபொருளும் வாசகனை நன்கு ஈர்ப்பனவாய் உள்ளன ' என்று மாதவி சிவலீலன் தனது விமர்சன உரையில் குறிப்பிட்டார்.

'ஈழத்துக்கவிஞர்களை மக்கள்மத்தியில் கொண்டு செல்லும் அரிய பணியை இம்மாதிரி விமர்சன அரங்குகளே முன்னெடுக்கின்றன. யாப்பு சிம்மாசனத்தில் வீற்றிருந்த காலம் போய், கருத்துகள் ஜனநாயகப்படுத்தப்பட்டு , புதிய வீச்சுடன் எழுந்திருக்கும் புதுக்கவிதையின் செழுமையை கருணாகரனின் 'இரவின் தூரம்' கவிதைகள் புலப்படுத்துகின்றன. கருணாகரனின் கவிதைகள் இத்தொகுப்பில் புதிய களத்தில், விபத்திற்குள்ளாகி மருத்துவமனையில் வலியோடும் துயரோடும் போராடும் மனநிலையில் எழுதப்பட்டுள்ளன. மோதலில் ஆரம்பித்து, காதலாகிக் கசிந்து முடிகிற தன்மையில் இயல்பான வரிகளில் வந்திருக்கின்றன. விரிந்து பரந்த ஈழத்துப் பூங்காவில் 'இரவின் தூரம்' நிலைபெற வல்லது' என்று விமர்சகர் மயூரன் கருத்துத் தெரிவித்தார்.

'அகதிகளை சட்ட விரோதக் குடியேறிகளாகக்கருதி, தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பு முகாம்களில் முப்பது ஆண்டுகளாக வாழும் விஜிதரனின் கொலீர வாழ்வின் பாடுகளை 'குருதி வழியும் பாடல்' கவிதைத்தொகுப்பு வெளிக்கொண்டு வந்திருக்கிறது. 'மொழி கொண்டு ஒன்றாவோம் என்று கூவித் திரிகையில், மொழி ஒன்றாகினும் நிலம் வேறான பரதேசிகளில் நானும் ஒருவன்' என்று குரல் தரும் தமிழகத்து மலையக அகதி ஒருவரின் குருதி வழியும் பாடல் இந்தக்கவிதை. உலகின் மிக இழிந்த வர்க்கமாக தொழிற்படும் கியூ பிராஞ்சின் வதைகள் சகித்துக்கொள்ள இயலாதவை. இவர்களின் கைகளில் ஈழத்து அகதிகள் படும் அவஸ்தையை விஜிதரன் தனது அனுபவத்திலிருந்து கவிதைகளாக வடித்திருக்கிறார்' என்று அரசியல் செயற்பாட்டாளர் தோழர் வேலு தனது விமர்சன உரையில் தெரிவித்தார்.

கவிதைத்தொகுப்புகளின் வித்தியாசமான தேர்வும், பெண் விமர்சகிகள் பெருமளவு பங்கு கொண்டதும், பெருந்தொற்று நோய்க்குப்பின்னரான கூட்ட ஒழுங்கும் குறிப்பிட்டுக்கூற வேண்டிய அம்சங்களாகும்.




பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலி
இரண்டு நூல்கள்:
சிறப்பு வெளியீடு
வானம் சிவந்த நாட்கள்
சாரல்நாடன்
VIMBAM
Vimbam: An Organisation for




வானம் சிவந்த நாட்கள்
சாரல்நாடன்






பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலி


விற்கன்ஸ்ரைன்:
மொழி, அர்த்தம், மனம்
க்ரியா
செ. வே. காசிநாதன்








மொழி, அர்த்தம்,

# எமது நெஞ்சார்ந்த நன்றிகள்

**விம்பத்தின் 'மலையக இலக்கிய மாநாடு'-2022 நிகழ்வினை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதில் எங்களுக்கு உறுதுணையாக நின்றவர்களுக்கு நன்றி சொல்லும் நேரமிது.**

இலங்கையிலிருந்து பிரதம விருந்தினராக வந்து மாநாட்டை அணி செய்த திரு. எச்.எச்.விக்ரமசிங்க அவர்கள்

வாழ்த்துச் செய்தி வழங்கிய மூத்த மலையக எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் அவர்கள்

நோர்வே, டென்மார்க், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்த உரையாளர்கள்

பல்துறைசார்ந்த மலையக நூல்களை சீராக அறிமுகம் செய்துதவிய விமர்சகர்கள்

இலங்கைத் தமிழகத்துடன் புகலிட நாடுகளிலிருந்தும் உரிய மலையக நூல்களை அனுப்பி உதவிய எழுத்தாளர்கள்

மெய்வெளி நாடக இயக்கம் மூலம் 'காத்தாயி காதை' நாடகத்தைத் தயாரித்து வழங்கிய நெறியாளர் சாம் பிரதீபன் அவர்களுடன் அவரது நாடகக்குழுவினர்

புகைப்படங்களை உதவிய சாந்தன் சாந்தகுணம்

தமிழகத்திலிருந்து பேருதவி புரிந்த, டாக்டர் எம்.ஜி.ஆர் - ஜானகி மகளிர் அறிவியல் மற்றும் கலைக்கல்லூரி மேலாளர் முனைவர் குமார் ராஜேந்திரன் அவர்கள்

நூலகம் வலைத்தள இயக்குனர் இ.பத்மநாப ஐயர்

வீரகேசரி, தினகரன், தினக்குரல், ஈழநாடு, உதயன்(இலங்கை), தமிழன், காலைக்கதிர் ஆகிய இலங்கைப் பத்திரிகைகள்

தாய்வீடு, உதயன் (கனடா), வெற்றிமணி (ஜெர்மனி), தாய் (தமிழகம்) ஆகிய பத்திரிகைகள்


முகநூலில் மாநாட்டுச் செய்திகளைப் பகிர்ந்து உதவிய முகநூல் அன்பர்கள்

மலையகத்திலிருந்து சிறார்களின் ஓவியங்களைப் பெறுவதில் பெரும் ஒத்துழைப்பு நல்கிய ஓவியர் தாஸ்(செல்வன்) அவர்கள்

Trinity Centre Hall ஐத் தந்துதவி, எங்களுக்கு ஒத்தாசை வழங்கிய மண்டப நிர்வாகிகள்

மலையக
இலக்கிய மாநாடு
2022

# நூல்கள், ஆசிரியர்கள்



# மலையக அரசியல்:
# தலைவர்களும் தளபதிகளும்




மலையகத்தின் அரசியல் தளத்தில் இயங்கிய 26 ஆளுமைகள் பற்றிய சி.வி.வேலுப்பிள்ளை (சி.வி.) அவர்களின் பதிவு ஆறு தசாப்தங்கள் கழித்து நூல் வடிவம் பெறுகிறது. இது ஈழத்து அரசியல் எழுத்திற்குக் கிடைத் திருக்கும் பெரும் பொக்கிஷமாகும். மலையகத்தின் அரும்பெரும் ஆவணப் பதிவாளராக சி.வி. ஈழத்து அரசியல் வரலாற்றில் நிலைபெறுகிறார்.

ஒரு கவிஞனின் சாணைக்கல்லில் வார்க்கப்பட்ட அரசியல் சொல் லோவியங்களாக அவரது எழுத்துக்கள் மிளிர்கின்றன. க.கைலாசபதி அவர்களால் தினகரனில் வெளியிடப்பட்ட இந்த அரசியல் கட்டுரைகள் மூலம் சி.வி. அரசியல் எழுத்தின் உன்னதத்தைத் தொட்டிருக்கிறார்.

மலையகத்தின் சென்றொழிந்துபோன ஒரு பழைய யுகத்தை மீட்டெடுத்து புதிதாய்ப் புனையும் பெரும் பணியைத் தோளில் சுமக்கும் பலம் சி.வி.யிடமே இருந்தது. அவரது விரிந்த வாசிப்பும் பரந்த கவியுள்ளமும் தொழிலாளர் நேசமும் தொழிற்சங்க ஈடுபாடும் அரசியல் தெளிவும் எழுத்து வன்மையும் தராசுபோல் சீர் தூக்கிப்பார்க்கும் பாங்கும் இந்த நூலுக்குப் பேரழகைச் சேர்த்திருக்கிறது.

மலையக அரசியல் வரலாற்றை அறிய விரும்பும் யாரும் சி.வி. எழுதிய இந்த வரலாற்றுப் புதையலைக் கடந்துபோக முடியாது.

- மு. நித்தியானந்தன் - லண்டன்